Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.908/2025

**Depositions of PW- 4**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.காசிராஜன் | Occupation | காவல் ஆய்வாளர் |
| Father's name | பெருமாள்சாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of July 2026.

15.07.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சங்கரன்கோவில் நகர் காவல்நிலையத்தில் குற்றபிரிவு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 15.03.2025 அன்று திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்று காலை மதுவிலக்கு சம்மந்தமாக மேற்படி காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் கண்ணன், தகா.1034 ரமேஷ் மற்றும் தகா.பாலமுருகன் ஆகியோர்கள் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து மேற்கொண்டு பிள்ளையார்நத்தம் அருகில் வைத்து ஆஜர் எதிரியை கைது செய்து நிலையம் அழைத்து வந்து 09.45 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் கண்ணன் எதிரிமீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கு கோப்பை எனது பார்வைக்கு வைத்தார். பின்னர் அன்றைய தினமே காலை 11.00 மணியளவில் இவ்வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மேற்படி சிறப்பு சார்பு ஆய்வாளர் கண்ணன், தகா.1034 ரமேஷ் மற்றும் தகா.பாலமுருகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ஆஜர் எதிரியை தக்க இருநகர் ஜாமீனில் விடுவித்தேன். பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து அன்றைய தினமே எதிரி மீது பிரிவு.4(1)(C) TNP Amendment Act 2024 ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

மேற்படி பிள்ளையார்நத்தம் பகுதியில் நிறைய குடியிருப்பு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். ஆனால் இவ்வழக்கு சம்பவமானது பிள்ளையார்நத்தம் கிராமத்திற்கு வெளியில் பனந்தோப்பு உள்ள பகுதியில் நடந்துள்ளது. இவ்வழக்கில் பிள்ளையார்நத்தம் அருகே என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் குறிப்பிட்டு எந்த இடம் என்று கூறப்படவில்லை என்றாலும் சரிதான். பிள்ளையார்நத்தம் அருகே என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி எதிரி ஏறியதாக கூறப்படும் பனைமரத்தை இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதனை புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து அசா.1 எனக்கு அனுப்பினார். நானும் அதனை பார்வையிட்டேன் ஆனால் அந்த புகைப்படம் மற்றும் வீடியோ இவ்வழக்கு கோப்பில் சேர்க்கப்படாமல் உள்ளது. மேற்படி பனங்கள்ளை அழிப்பதற்கு முன்பு நீதிமன்றத்தில் உத்தரவு எதுவும் பெற்றோமா என்றால் இல்லை. ஆனால் இவ்வழக்கில் நான் அவர்களுக்கு வாய்மொழியாக மேற்படி பொருட்களை அழிக்க உத்தரவு கொடுத்தேன். மேற்படி பனங்கள்ளை அழிக்க உத்தரவிடுவதற்கு எனக்கு அதிகாரமில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதா என்றால் எதிரியிடம் எழுத்துபூர்வமான ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை ஆனால் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை வீடியோ பதிவு செய்யப்பட்டது ஆனால் அதை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி நான் கூறியவாறு வீடியோ மற்றும் புகைப்படம் எடுக்கவில்லை என்றாலும் அவ்வாறு எடுத்திருந்தால் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்றாலும் நான் தற்போது புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து பனங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கானது எதிரிமீது புள்ளிவிவரத்திற்காக பொய்யாக போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.